**பாடம் - 12**

**ஈமானும் அதன் அடிப்படைகளும்(தொடர்ச்சி)**

**الدرس الثانى عشر**

**تابع الإيمان وأركانه**

**2.மலக்குகளை நம்புவது**

இந்த நம்பிக்கையில் பொதுவாக நம்புவது, குறிப்பாக நம்புவது என இரு வகை உள்ளன. பொதுவாக நம்புவது என்றால் அல்லாஹ்வுக்கு மலக்குகள் இருக்கிறார்கள்ளூ தன்னை வணங்குவதற்காகவே அவன் அவர்களைப் படைத்துள்ளான். அவர்களில் அர்ஷை சுமக்கும் பொறுப்பு கொடுக்கப் பட்டவர்கள், சொர்க்கத்தையும் நரகத்தையும் பாதுகாப்பவர்கள், அடியார்களின் செயல்களைப் பாதுகாக்கும் பொறுப்பு வழங்கப்பட்டவர்கள் என அநேக வகையினர் உள்ளனர் என்று நம்ப வேண்டும். குறிப்பாக நம்புவது என்றால் அல்லாஹ்வும் அவன் தூதரும் பெயர் குறிப்பிட்டு சொல்லியிருக்கின்ற வானவர்களை நம்புவதாகும். ஊதாரணமாக ஜிப்ரீல், மீகாயீல், நரகத்தின் பாதுகாவலர் மாலிக், சூர் ஊதும் பொறுப்பு ஒப்படைக் கப்பட்ட வானவர் இஸ்ராஃபீல் போன்றோர்.

عن عائشة ـ رضي الله عنها ـ أنَّ النبي ـ ﷺ ـ قال: (( خُلقت الملائكة من نور ، وخُلق الجان من مارج من نار ، وخُلق آدم مما وُصِفَ لكم )) ﴿رواه مسلم:٢٩٩٦﴾

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: வானவர்கள் ஒளியாலும் ஜின்கள் நெருப்பின் ஜுவாலையிலிருந்தும் படைக்கப்பட்டுள்ளனர். ஆதம் (ஏற்கனவே) உங்களுக்குக் கூறப்பட்டுவிட்ட ஒன்றிலிருந்து (மண்ணிலிருந்து) படைக்கப் பட்டுள்ளார். அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி), நூல்: முஸ்லிம்(2996)

**3.வேதங்களை நம்புவது**

அல்லாஹ் தனது கடமையை விளக்குவதற்காகவும் அதன் பால் மக்களை அழைப்பதற்காகவும் தன்னுடைய நபிமார்கள், ரசூல்மார்களுக்கு வேதங்களை இறக்கி யருளினான் எனப் பொதுவாக நம்புவது அவசிய மாகும். குறிப்பாக தவ்ராத், இன்ஜீல், ஜபூர், குர்ஆன் போன்ற அல்லாஹ் பெயர் குறிப்பிட்டுச் சொன்ன வேதங்களை நம்ப வேண்டும். திருக்குர்ஆன் தான் இவற்றில் இறுதியானதாகும். இது முந்தைய வேதங்களை விட உயர்வானதும் அவற்றை உண்மைப்படுத்தக் கூடியதாகவும் இருக்கின்றது.

மேலும் இந்தக் குர்ஆனையும் ஆதாரப்பூர்வமான நபிமொழிகளையுமே பின்பற்றுவதோடு எல்லாப் பிரச்சனைகளுக்கும் இவற்றையே தீர்வாக எடுத்துக் கொள்வது சமுதாயத்தினர் அனைவர் மீதும் கடமையாகும். ஏனெனில் அல்லாஹ் முஹம்மத் நபி(ஸல்) அவா;களை ஜின், மனித சமுதாயம் அனைத்திற்கும் தூதராக அனுப்பி அவர்களுக்கிடையே தீர்ப்பு வழங்குவதற்காக இந்தக் குர்ஆனையும் அவர்களுக்கு இறக்கி அருளியிருக்கிறான். இத்திருக்குர்ஆனை, அல்லாஹ் இதயங்களிலுள்ளதற்கு நோய் நிவாரணமாகவும், யாவற்றையும் தௌ;ளத் தெளிவாக விளக்கக்கூடியதாகவும், அகிலத்தார்களுக்கு நேர்வழி காட்டக்கூடியதாகவும், ஓர் அருளாகவும் ஆக்கியுள்ளான்.

﴿ وَهَذَا كِتَابٌ أَنْزَلْنَاهُ مُبَارَكٌ فَاتَّبِعُوهُ وَاتَّقُوا لَعَلَّكُمْ تُرْحَمُونَ ﴾ ﴿الأنعام:١٥٥﴾

அல்லாஹ் கூறுகிறான்: இது நாம் அருளிய பாக்கியம் பொருந்திய வேதமாகும். எனவே நீங்கள் இதனைப் பின்பற்றுங்கள்ளூ (நம்மை) அஞ்சுங்கள்ளூ அருள் செய்யப்படுவீர்கள். (6:155)

﴿ وَنَزَّلْنَا عَلَيْكَ الْكِتَابَ تِبْيَانًا لِكُلِّ شَيْءٍ وَهُدًى وَرَحْمَةً وَبُشْرَى لِلْمُسْلِمِينَ ﴾ ﴿النحل:٨٩﴾

இவ்வேதத்தை ஒவ்வொரு பொருளையும் தெளிவாக்கக்கூடியதாகவும், நேர்வழி காட்டக்கூடியதாகவும், அருளாகவும் முஸ்லிம்களுக்கு நற்செய்தி யாகவும் உமக்கு அருளினோம். (16:89)

**4.தூதர்களை நம்புவது**

தூதர்களைப் பொதுவாகவும் குறிப்பாகவும் நம்புவது அவசியமாகும். நிச்சயமாக அல்லாஹ் தன்னுடைய அடியார்களுக்குச் சொர்க்கத்தைக் கொண்டு நற்செய்தி கூறவும் நரகத்தைக் கொண்டு எச்சரிக்கை செய்யவும் சத்தியத்தின் பால் அவர்களை அழைப்பதற்காகவும் தூதர்களை அனுப்பிவைத்தான் என்று நம்ப வேண்டும்.

﴿ وَلَقَدْ بَعَثْنَا فِي كُلِّ أُمَّةٍ رَسُولاً أَنِ اعْبُدُوا اللهَ وَاجْتَنِبُوا الطَّاغُوتَ ... ﴾ ﴿النحل:٣٦﴾

அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ்வையே வணங்குங்கள், 'தாகூத்' (தீய சக்தி) களை விட்டு விலகி விடுங்கள் என்று திண்ணமாக நாம் ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒரு தூதரை அனுப்பி வைத்தோம். (16:36)

யார் அவர்களின் அழைப்பை ஏற்றுக்கொள்கிறாரோ அவர் நற்பாக்கியம் பெற்று வெற்றி பெற்றுவிட்டார். யார் அவர்களுக்கு மாறுசெய்கின்றாரோ அவர் ஏமாற்றமும் கைசேதமும் அடைந்து தோல்வி அடைந்து விட்டார். இறைத்தூதர்கள் அனைவரின் பிரச்சாரமும் ஒன்று தான். அது 'அல்லாஹ் ஒருவனை மட்டுமே நம்ப வேண்டும்ளூ வணக்க வழிபாடுகளை அவனுக்கு மட்டும் செய்ய வேண்டும்' என்பது தான். ஷரீஅத்திலும் சட்டதிட்டங்களிலும் தான் அவர்களிடையே வேறுபாடு இருந்தது என்றும் நம்ப வேண்டும். மேலும் இறைத்தூதர்களில் நம்முடைய நபி முஹம்மது (ஸல்) அவர்கள்தாம் இறுதியானவரும் மிகச் சிறந்தவருமாவார்கள் என்றும் நம்ப வேண்டும்.

﴿ وَلَقَدْ فَضَّلْنَا بَعْضَ النَّبِيِّينَ عَلَى بَعْضٍ ﴾ ﴿الاسراء:٥٥﴾

அல்லாஹ் கூறுகிறான்: நபிமார்களில் சிலரை சிலரை விடச் சிறப்பித்திருக்கிறோம். (17:55)

﴿ مَا كَانَ مُحَمَّدٌ أَبَا أَحَدٍ مِنْ رِجَالِكُمْ وَلَكِنْ رَسُولَ اللهِ وَخَاتَمَ النَّبِيِّينَ ﴾ ﴿الأحزاب:٤٠﴾.

முஹம்மத் உங்களுடைய ஆண்களில் எவருக்கும் தந்தையாக இருக்கவில்லை. மாறாக அல்லாஹ்வின் தூதராகவும் நபிமார்களில் இறுதியான வராகவும் இருக்கிறார். (33:40)

அல்லாஹ்வும் அவன் தூதரும் பெயர் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கும் தூதர்களை நாம் குறிப்பாக நம்ப வேண்டும். உதாரணமாக நூஹ், ஹூத், ஸாலிஹ், இப்றாஹீம் (அலை) மற்றும் பலர்.